# இன்றைய இறைவார்த்தை

# 13-07-2015

**ஆண்டின் பொதுக்காலம் 15ஆம் வாரம் – திங்கள்**
**முதல் ஆண்டு**

**முதல் வாசகம்:**

இஸ்ரயேல் மக்கள் எண்ணிக்கையில் பெருகிடாதவாறு தந்திரமாய்ச் செயல்படுவோம்.

**விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகம். 1 : 8 – 14, 22**

அந்நாள்களில் யோசேப்பை முன்பின் அறிந்திராத புதிய மன்னன் ஒருவன் எகிப்தில் தோன்றினான். அவன் தன் குடிமக்களை நோக்கி, "இதோ, இஸ்ரயேல் மக்களினம் நம்மை விடப் பெருந்தொகையதாயும், ஆள்பலம் வாய்ந்ததாயும் உள்ளது. அவர்கள் எண்ணிக்கையில் பெருகிடாதவாறு தந்திரமாய்ச் செயல்படுவோம், வாருங்கள். ஏனெனில் போர் ஏற்படுமாயின், அவர்கள் நம் எதிரிகளுடன் சேர்ந்து கொள்வர். நம்மை எதிர்த்துப் போரிடுவர். இந்நாட்டிலிருந்தும் வெளியேறிவிடுவர்" என்று கூறினான். எனவே கடும் வேலையால் அவர்களை ஒடுக்குவதற்காக அடிமை வேலை வாங்கும் அதிகாரிகள் அவர்கள் மேல் நியமிக்கப்பட்டனர். பார்வோனுக்காக அவர்கள் பித்தோம், இராம்சேசு ஆகிய களஞ்சிய நகர்களைக் கட்டியெழுப்பினர். ஆயினும் எத்துணைக்கு எகிப்தியர் அவர்களை ஒடுக்கினார்களோ, அத்துணைக்கு அவர்கள் எண்ணிக்கையில் உயர்ந்தனர். பெருகிப் பரவினர். இதனால் எகிப்தியர் இஸ்ரயேல் மக்களைக் கண்டு அச்சமுற்றனர். எகிப்தியர் இஸ்ரயேல் மக்களைக் கொடுமைப்படுத்தி வேலை வாங்கினர். கடினமான சாந்து செங்கல் வேலையாலும், அனைத்து வயல்வெளி வேலையாலும், மேலும் கொடுமைப்படுத்தி வாங்கிய ஒவ்வொரு வேலையாலும், அவர்கள் வாழ்க்கையே கசந்து போகும்படி செய்தனர். பின்னர், பார்வோன் தன் குடிமக்கள் அனைவருக்கும் ஆணைவிடுத்து, "பிறக்கும் எபிரேய ஆண் மகவு அனைத்தையும் நைல் நதியில் எறிந்து விடுங்கள். பெண் மகவையோ வாழ விடுங்கள்" என்று அறிவித்தான்.

**ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா! உமக்கு நன்றி.**

**பதிலுரைப்பாடல்:**
**திருப்பாடல்கள்: 124 : 1 – 3, 4 – 6, 7 – 8 (பல்லவி 8a)**
**பல்லவி: ஆண்டவரின் பெயரே நமக்குத் துணை.**

1. ஆண்டவர் நம் சார்பாக இருந்திராவிடில், இஸ்ரயேல் மக்கள் சொல்வார்களாக! ஆண்டவர் நம் சார்பாக இருந்திராவிடில், நமக்கு எதிராக மனிதர் எழுந்தபோது, அவர்களது சினம் நம்மேல் மூண்டபோது, அவர்கள் நம்மை உயிரோடு விழுங்கியிருப்பார்கள். பல்லவி

2. அப்பொழுது, வெள்ளம் நம்மை மூழ்கடித்திருக்கும். பெரு வெள்ளம் நம்மீது புரண்டோடியிருக்கும். கொந்தளிக்கும் வெள்ளம் நம்மீது பாய்ந்தோடியிருக்கும். ஆண்டவர் போற்றி! போற்றி! எதிரிகளின் பற்களுக்கு அவர் நம்மை இரையாக்கவில்லை. பல்லவி

3. வேடர் கண்ணியினின்று தப்பிப் பிழைத்த பறவைபோல் ஆனோம். கண்ணி அறுந்தது. நாம் தப்பிப் பிழைத்தோம். ஆண்டவரின் பெயரே நமக்குத் துணை! விண்ணையும் மண்ணையும் உண்டாக்கியவர் அவரே! பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: (மத்தேயு: 5:10)**

அல்லேலூயா, அல்லேலூயா!
நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப் படுவோர் பேறுபெற்றோர்.
ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.
அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

அமைதியை அல்ல, வாளையே கொணர வந்தேன்.

✠ **தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 10 : 34 – 11 : 1**

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியது: “நான் உலகிற்கு அமைதி கொணர வந்தேன் என எண்ண வேண்டாம். அமைதியை அல்ல, வாளையே கொணர வந்தேன். தந்தைக்கு எதிராக மகனையும், தாய்க்கு எதிராக மகளையும், மாமியாருக்கு எதிராக மருமகளையும், நான் பிரிக்க வந்தேன். ஒருவருடைய பகைவர் அவரது வீட்டில் உள்ளவரே ஆவர். என்னை விடத் தம் தந்தையிடமோ தாயிடமோ மிகுந்த அன்பு கொண்டுள்ளோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர். என்னை விடத் தம் மகனிடமோ மகளிடமோ மிகுதியாய் அன்பு கொண்டுள்ளோரும் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர். தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர். தம் உயிரைக் காக்க விரும்புவோர் அதை இழந்து விடுவர். என் பொருட்டுத் தம் உயிரை இழப்போரோ அதைக் காத்துக் கொள்வர். உங்களை ஏற்றுக் கொள்பவர் என்னை ஏற்றுக் கொள்கிறார். என்னை ஏற்றுக் கொள்பவரோ என்னை அனுப்பினவரையே ஏற்றுக் கொள்கிறார். இறைவாக்கினர் ஒருவரை அவர் இறைவாக்கினர் என்பதால் ஏற்றுக் கொள்பவர் இறைவாக்கினருக்குரிய கைம்மாறு பெறுவார்.

நேர்மையாளர் ஒருவரை அவர் நேர்மையாளர் என்பதால் ஏற்றுக் கொள்பவர் நேர்மையாளருக்குரிய கைம்மாறு பெறுவார். இச்சிறியோருள் ஒருவருக்கு அவர் என் சீடர் என்பதால் ஒரு கிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவரும் தம் கைம்மாறு பெறாமல் போகார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.” இயேசு தம் பன்னிரு சீடருக்கும் அறிவுரை கொடுத்து முடித்ததும் பக்கத்து ஊர்களில் கற்பிக்கவும் நற்செய்தியை அறிவிக்கவும் அவ்விடம் விட்டு அகன்றார்.

கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.

**சிந்தனைக்கு:**

நிச்சயமாக அமைதிதான். அதற்காக சுடுகாட்டு அமைதி அல்ல. துப்பாக்கி சத்தம் கேட்கும் சுதந்திர பூமி நல்லது. மயான அமைதி அல்ல. மனிதம் மதிக்கப்படும் மண் பெரிது. வாயும் வயிறும்தான் வாழ்வு என்ற ஐந்தறிவு அமைதியை விட, அறிவும் ஆனந்தமும் உள்ள ஆறறிவு போராட்ட வாழ்வு மேலானது. என்ன நடந்தாலும் எந்த பாதிப்பும் இல்லாமல் நடைபிணங்களாக, ஜடங்களாக அலையும் அமைதியை விட, தொட்டால் சுருங்கியாக, பற்றி எரியும் பாஸ்பரமாக, உணர்வோடு உறிமையோடு வாழ்வதல்லவா வாழ்வு. இத்தகைய மனிதமும் மனிதமாண்பும் நற்செய்தி மதிப்பீடுகளும் மதிக்கப்படும் சூழலில் உள்ள அமைதியையே இயேசு இவ்வுலகிற்குக் கொண்டு வந்தார். இந்த அமைதி உருவாக்கும் உன்னதப் பணியில் ஒரு வாளாகப் பயன்படவும் இயேசு தயங்கவில்லை. அமைதி என்ற சாக்கில், சந்தடியில், அநீதியோடு, அவமானத்தோடு, அதிகாரத்தோடு சாமரம் வீசி சமரசம் செய்து கொள்ள வந்தவர் அல்ல இயேசு. இதற்காக உறவோடும் கூட ஒப்புரவு செய்து கொள்ளத் தயாராக அவர் இல்லை. உண்மைக்காக உறவைப் பிரிக்க, பிளக்க, வாளைப் பயன்படுத்தத் தயாராக வந்தவரே நம் இயேசு. அநீதியை வெட்டி வீழ்த்தி அதிலே உருவாகும் உன்னதமான உயர்ந்த நிலையான தெய்வீக அமைதியை உலகிற்கு வழங்கவே இயேசு வந்தார். அவரது அமைதிப் படைக்கு நீ வேண்டும். வாழ்த்துக்கள். ஆசீர்.

**********